# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 10.11.2020</u>

<u>முன்னிலை</u>

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 1582/B/2019</u>**

திரு. R. அரிகரன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர், சேலம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் இன்றைய தின விசாரணையில் மனுதாரர், திரு.R. அரிகரன், வழக்கறிஞர், திருப்பூர் அவர்களும் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களும் விசாரணையில் கலந்து கொண்டார்கள்

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)ன் கீழ் அளிக்கப்பட்ட தனது 4.10.2018 நாளிட்ட மனுவில், கோயில், தேவாலயம், மசூதி போன்ற அனைத்து சமயங்களின் வழிப்பாட்டுதள கட்டிடம் கட்டுவதற்கு அரசு அனுமதி பெறுதல் சம்பந்தமாக ஆவணங்கள் மற்றும் ஆவண நகல்கள் கேட்டு, பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலரிடமிருந்து தகவல் எதுவும் பெறப்படாத நிலையில், 26.11.2018 தேதியிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் பதில் எதுவும் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், 22.2.2019 தேதியிட்டு, இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

4. இன்றைய தின விசாரணையின்போது, பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு இரண்டு நாட்களுக்குள் தகவல் அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டார். பொது தகவல் அலுவலரும் விசாரணையின்போது உறுதியளித்தபடி, மனுதாரருக்கு தகவலை வழங்கி, அதன் நகலை ஆணையத்திற்கும் அளித்துள்ளார். மனுதாரரும் தகவலை தான் பெற்றுக் கொண்டதாகவும் பெற்றுக் கொண்ட தகவல் திருப்திகரமானது என்றும் தெரிவித்தார். இவ்வழக்கில் மேல்விசாரணை தேவையில்லை என்று ஆணையம் கருதி, இவ்வழக்கின் மீதான விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA/1582/B/2019</u>**

பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொது தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர்,
சேலம் மாவட்டம்.

மனுதாரர்
திரு. R. அரிகரன், வழக்கறிஞர்,
18/1, போஸ்டல் காலனி,
சிவன் தியேட்டர் ரோடு,
திருப்பூர் 641 602.
அலைபேசி - 96005 11373,

Copy to: File
SSPA-16.11.2020S/PA 16/11/2020